1991 சனவரி 21]

நேரம் அல்லது ஒரு மணி நேரம் ஆகிறது. வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், இங்கிருந்து நாகர்கோவில், திருநெல்வேலி போன்ற பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளும் மிக அதிகமான அளவில் இருப்பதால் மிகவும் நெருக்கடியான ஒரு சூழ்நிலை அந்த பஸ் ஸ்டாண்டில் இருக்கிறது. ஆகவே அவற்றை இரண்டு பிரிவாகப் பிரித்து அதாவது தெற்குப் பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளுக்குத் தனியாகவும், வட பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளுக்குத் தனியாகவும் என்று தனித்தனியாகப் பேருந்து நிலையங்களை அமைத்துக் கொடுத்தால் நெருக்கடியைத் தவிர்க்கலாம். ஆகவே அரசு அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய யோசனைப்படிதான் ஏற்கெனவே சென்னைக்கு வரக்கூடிய, அதாவது தெற்கு மாவட்டங்களில் இருந்து வரக்கூடிய பேருந்துகள் மற்றும் அதேமாதிரி மாதவரம், திருவொற்றியூர் பகுதிகளிலிருந்து வரக்கூடிய பேருந்துகள் ஆகியவற்றிற்கு இன்னொரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் முடிவு எடுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் மீன்பிடி குத்தகை.

*7082—திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருக்கோவில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் மீன்பிடிக் குத்தகை விடுவது பற்றி முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் மீன்பிடிக் குத்தகை விடுவது பற்றி முறையீடு ஏதும் வரவில்லை. ஆனால் மன்னார்குடி சேதுபாவா அறக்கட்டளைக்குச் சொந்தமான தெப்பக் குளத்தில் மீன்பிடிக் குத்தகை விடுவது பற்றி முறையீடு வந்துள்ளது. இந்தக் குளத்தில் மீன்பிடிக் குத்தகையைத் தங்களுக்குத்தான் விடவேண்டும் என்று கோரி மன்னார்குடி

[1991 சனவரி 21

பர்வதராஜகுல உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினரும், அதேபோல திருத்துறைப்பூண்டி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினரும் அரசுக்கு மேல்முறையீடுகள் செய்துள்ளனர்.

(ஆ) இக்கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு மேற்படி தெப்பக்குளத்தில் மீன் பாசிக்குக் குத்தகையைப் பொது ஏலத்தில் விட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, திருக்கோயில்களில் உள்ள குளங்களில் மீன் பிடிப்பதால் அவற்றின் புனிதத் தன்மையே கெட்டுப்போய் விடுகிறது. ஆனால் வருவாயைப் பற்றியும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்தான். ஆனால் தண்ணீரே இல்லையே, தண்ணீரே இல்லை என்றால் மீன் எப்படிப் பிடிப்பது? கபாலீஸ்வரர் குளத்தில் தண்ணீரே இல்லாமல் அங்கே கிரிக்கட் ஆடலாம் போல் இருக்கிறது, கலைஞர் அவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மீன்பிடிக்க வாருங்கள் அய்யா.

9-40 மணி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனிதத் தன்மை கெட்டுப்போகின்றதாலே அதற்கு மாறாக வேறு ஏதாவது, தாமரை இலைகளை, வேறு ஏதாவது புஷ்பங்களை விளைவித்து அந்த வருவாயை ஈடுகட்ட அரசு முன் வருமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள திருக்கோயில்களுடைய மதில் சுவருக்கு உள்ளே இருக்கக்கூடிய திருக்குளங்களிலே, அதேபோல், மதில் சுவருக்கு வெளியிலே இருந்தாலும், தெப்பத் திருவிழா நடைபெறுகின்ற தெப்போற்சவ திருக்குளங்களிலே இதுபோன்று மீன்பிடிக்க அனுமதி தருவது கிடையாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, எங்கள் தொகுதியிலே இப்போது ஜம்புகேஸ்வரர் தேவஸ்தானத்தில் உள்ள தெப்பக்குளம் பெரிய தெப்பக்குளம் தெப்ப உற்சவம் நடந்துகொண்டிருக்கிறது. அதிலே மீன் பிடிப்பதற்குக் குத்தகைக்கு விட்டு இன்னும் அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைத் தடுத்து நிறுத்தி அதைப் புனிதப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

1991 சனவரி 21]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளங்களில் மீன்கள் இருந்தால் தான் அந்தக் குளத்திலே இருக்கின்ற அழுக்கைத் தின்று குளத்தைத் தூய்மைப்படுத்தும் என்பது விஞ்ஞான ரீதியாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஒன்று. தூய்மையாக ஆகவேண்டிய குளத்தை, தூய்மையற்றதாக இருக்கவேண்டும் என்று தீட்சிதர் அவர்கள் விரும்புகிறார்களா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லும் பதிலை நான் சுத்தமாக நம்புகிறேன். இருந்தாலும் பல இடங்களில் இருப்பதைச் சொல்கிறேன். பாபநாசம் நதியிலே வருகிறது. அந்த இடத்திலே ஒரு மைலுக்கு மீன் பிடிக்கக் கூடாது என்று இருக்கிறது. சிருங்கேரி துங்கா நதியிலே போனால், 2 மைல்களுக்கு மீன் பிடிக்கக்கூடாது என்று இருக்கிறது. அதே போல் ரிஷிகேசத்தில் 3 மைல்களுக்கு மீன் பிடிக்கக் கூடாது என்று இருக்கின்றது. மீன்கள் நிறைய இருக்கின்றன. அந்த மாதிரி மீன்பிடித்துத்தான் அதை சுத்தம் பண்ணவேண்டும் என்பது தேவையில்லை. மீன்களைப் பிடிக்காமலேயே அதன் அவுட்லெட்டையும், இன்லெட்டையும் சரியான முறையிலே அமைத்தால் அது சுத்தமாக இருக்கமுடியுமா என்பதைப் பற்றி அரசு ஆராயவேண்டுமென்று விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

அருள்மிகு கபாலீஸ்வரர் கோவில் திருக்குளத்தைச் சீர்படுத்தி தெப்ப உற்சவம் நடத்துதல்

* 10011—திரு. நா. கணபதி

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கோவில் திருக்குளத்தைச் சீர்படுத்தி, தண்ணீர் தேக்கி தெப்ப உற்சவம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில் திருக்குளத்தைச் சீர் திருத்தி சரிசெய்து அதில் தண்ணீர் தேக்கி, தெப்ப உற்சவம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக்காலமாக தண்ணீர் கட்டுப்பாட்டால் கபாலீஸ்வரரே பாதிக்கப்பட்டு.....